12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்
அருளியது

# இந்து வேதம் எனும் கொள்கையும், இந்து மதம் எனும் நடைமுறையும் செந்தமிழ் மொழியில்தான் உள்ளன!



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 ஐப்பசி மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

**1. இந்துவேதம் பரப்பும் நாயகத்திற்கு எழுதப்பட்ட 'நலம் நாடும் செயல்விளக்கத் திருவோலை'.**

**2. "மாற்றமே அறிவு வளர்ச்சி" என்ற தலைப்பில் குருதேவர் அவர்கள் தாம் எழுத நினைத்த நூலிற்காகத் தயாரித்த கட்டுரை.**

## இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில...

இந்து மதத்தில் சிவ பதவி, சத்தி பதவி, மாயோன் பதவி, பிறமண் பதவி, தேவர் பதவி, தேவதை பதவி முதலிய பதவிகளில் வாழ்ந்திட்ட கடவுள்களில் பெரும்பாலான கடவுள்கள் தங்களுடைய பதவிக்காலம் முடிந்தவுடன் தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் குடிபுகுந்துள்ளார்கள். எனவேதான், இந்து வேதத்தில் 1) "தமிழ்நாடுதான் கடவுள்களின் பிறப்பிடம், இருப்பிடம், தாய்நாடு", 2) "தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களின் உள்ளங்களும் இல்லங்களும்தான் **அருளுலக நாற்றங்கால்கள்**, **அருளுலக நாற்றுப் பண்ணைகள்**, **அருளுலக விதைப் பண்ணைகள்**", 3) "தமிழ்நாட்டில்தான் உலகம் முழுவதும் உள்ள கடவுள்கள் வந்து தங்கி ஓய்வெடுத்துப் புத்துணர்வு பெற்றுச் செல்லும் 'கரந்தமலை' இருக்கின்றது"..... ... ... என்ற பல கருத்துமிகு செய்திகள் வழங்கப் படுகின்றன.

# <u>இந்துவேதம் பரப்பும் நாயகத்திற்கு எழுதப்பட்ட 'நலம் நாடும் செயல்விளக்கத் திருவோலை'</u>

பொன்னேரி
26/2/92

அனுப்புநர்:

ஞானச்சாரியார்,
வரதராசபுரம், அம்பத்தூர்,
சென்னை-600053.

பெறுநர்:

அருள்மிகு சமயக்குரவர் நால்வர் திருத்தோன்றல்,
மதுரை - 1.

அன்பு மகன், அருமைச் செல்வன், அளப்பரிய அருளுலக ஆர்வமும், ஆற்றலும் உடைய இந்துவேதம் பரப்பும் நாயகம், சமயக்குரவர் நால்வரின் திருத்தோன்றல், அருள்மிகு சங்கரன்கோயில் கோமதியம்மன் சன்னிதானம், சித்தரடியார் த. கேசவன் அவர்களுக்கு; தங்களின் ஞானத்தந்தை, தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் விடுத்துக் கொள்ளும் <u>நலம் நாடும் செயல்விளக்கத் திருவோலை</u>:

1. தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும், உற்றார் உறவினருக்கும் எல்லா நலங்களும் வளங்களும் உண்டாகட்டும் என்று வாழ்த்துகிறோம்.

2. தங்களின் புதுமனை புகுவிழா எல்லா நலங்களுடனும் சிறப்பாக வெற்றி பெற்றிருக்கும் என்று நம்புகிறோம், வாழ்த்துகிறோம்.

அத்திருவிழாவில் எம்மால் கலந்து கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம் எமக்கு இருக்கிறது. விரைவில் தங்களின் இல்லம் வர விரும்புகிறோம். தங்களின் துணைவியாருக்கும், குழந்தைகளுக்கும் எமது வாழ்த்தைக் கூறுங்கள்.

3. திருநிறைச் செல்வனே! கடந்த சில ஆண்டுகளாக கோடை விடுமுறையின் போது ஏதேனும் ஒரு மருத்துவத்திற்காக வீட்டிலேயே தங்க நேரிட்டு விடுகிறது. இந்த ஆண்டும் வலது கண் மருத்துவத்தை முன்னிட்டு ஏப்ரல் 2ஆவது வாரம் முதல் குறைந்தது 1 மாத காலம் எங்கும் செல்ல முடியாது என்று நம்புகிறோம். எனவே, அதற்கு முன் ஒரு சில இடங்களுக்காவது சுற்றுப் பயணம் சென்று வர முயலுகிறோம். இதன்படி 6/3/92 மாலை சென்னையிலிருந்து இராமேசுவரம் விரைவு வண்டியில் புறப்பட்டு சனிக்கிழமை காலை தஞ்சை வந்து சேருகிறோம். அனேகமாக, தொடர்ந்து குறைந்தது நான்கு நாட்கள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்வோம். தஞ்சை, பாபநாசம், மாயவரம், கும்பகோணம், தாராசுரம்,.... முதலிய இடங்களில் அருள் வழங்கலும், அருளுரை ஆற்றலும், திராவிடக் கழகத்தவரைச் சந்தித்தலும் நிகழவிருக்கின்றன. அப்பொழுது, தங்களால் இயன்றால் மின்னல் வேகத்திலாவது தஞ்சை மாவட்டம் வந்து எம்மை கண்டு செல்ல முற்படுங்கள். தங்களைக் காணப் பெரிதும் விரும்புகிறேன், எதிர்பார்க்கிறேன்.

4. அன்பு மகனே! என்னுடைய அநுபவத்தில் இந்த இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏறத்தாழ எல்லா கல்வி நிலையங்களிலும் **இந்து வேதமும், இந்து வேதமதமான இந்து மதமும் கூறக் கூடிய 'இந்தியம்', 'இந்து'** எனப் பெயரிடப்படும் அல்லது என்ற பெயரில் வழங்கப்படும் வரலாறுகள், தத்துவங்கள், செயல் சித்தாந்தங்கள், வாழ்வியல் நடைமுறைகள், மனித சமுதாய மதிப்பீடுகள், அருட்பயிற்சிக்குரிய சாத்தர, சாத்திர, சாத்திறங்கள், அரசியல் கொள்கைகள்,.... முதலிய அனைத்துமே வெறுமையானவை,

மடமையானவை, பயனற்றவை, கண்மூடித்தனமானவை, கற்பனையானவை, பொய்யானவை, போலியானவை...... என்று எல்லா மாணவர்களும் கருதும்படிதான் பாடத் திட்டங்களும் இருக்கின்றன; ஆசிரியர் போதனைகளும் இருக்கின்றன.

அதாவது நமது நாட்டு நடப்பில் இன்றைக்கு முதியவர்களாகவும், நடுத்தர வயதினர்களாகவும் இருப்பவர்களும் சரி!; வளர்ந்து வரும் இளைய தலைமுறையினர்களும் சரி!; நம் நாட்டிற்குரிய தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கு வகைப்பட்ட வாழ்வியல்களும்; பல நூறுயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும், இவர்களைச் சேர்ந்தவர்களாலும் நன்கு திட்டமிடப்பட்டு வழங்கப் பட்டவைதான் என்பதையும்; இவை வரையறை செய்யப்பட்டுத்தான், இந்து வேதம் எனும் கொள்கையாகவும், இந்து வேதமதமான இந்து மதம் எனும் நடைமுறையாகவும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் உணர வேண்டும்.

இந்த இந்து வேதம் 396 நூல்களாகவும், இந்துமதம் 36 நூல்களாகவும் ஆக மொத்தம் 432 நூல்களில் **இந்தியம்** என்ற பெயரிலும், **இந்து** என்ற பெயரிலும் வழங்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக, சிறப்பாக இந்த 432 நூல்களும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான **அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான்** வெளியிடப் பட்டிருக்கின்றன என்ற பேருண்மையினை நமது தாயக மக்கள் உணர்வதிலும், பிறருக்கு உணர்த்துவதிலும்தான் நமக்கென வகுத்தளிக்கப்பட்ட தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு சிறப்படைவது இருக்கிறது.

5. எனது அரிய வீரிய மிக்க, விவேகம் நிறைந்த மகனே! உனக்குள்ள வணிகச் சூழ்நிலைகளில் உன்னுடைய நெஞ்சையும், சிந்தையையும் அடிக்கடி வேறு துறைகளில் ஈடுபடுத்த விரும்பவில்லை யாம். எனவேதான், யாம் உனக்கு அடிக்கடி நமது இயக்கச் செய்திகளையோ (இ.ம.இ.); நமது கழகச் செயல்களையோ (இ.மு.க.); எமது அன்றாட அருட்பணி நடைமுறைகளையோ விளக்கியுரைத்து அஞ்சல்கள் எழுதுவதில்லை, எழுதுவதில்லை, எழுதுவதில்லை. இப்பேருண்மையினை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும் நீ. ஏனென்றால், உன்னோடு அடிக்கடி அஞ்சல் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற துடிதுடிப்பு எமக்கு மிகுதியாக இருந்த போதிலும்; உன்னுடைய வணிகத் தொழிலுக்கு எம்மால் பாதிப்பு வந்து விடக் கூடாது என்பதை எண்ணித்தான் எமது அஞ்சல் தொடர்புகளை குறைத்துக் கொண்டுள்ளோம்.

ஆனால்!, ஆனால்!!, ஆனால்!!!,... அன்பு மகனே, உன்னை அடிக்கடி எம் அருகில் வைத்துக் கொண்டுதான் செயல்திட்டங்களை வகுக்க வேண்டும், அருட்பணிகளை ஆற்ற வேண்டும், சமுதாய அரசியல் கருத்து விளக்கங்களை வழங்க வேண்டும் என்று விரும்புகிறோம் யாம். எனவேதான், மேற்கு மண்டலச் சுற்றுப் பயணத்திற்கு உம்மை அழைக்காதிருந்த குறையைப் போக்கிக் கொள்ள இந்த வாரம் 6/3/92 முதல் 10/3/92 முடிய யாம் மேற்கொள்ளப்போகும் கிழக்கு மண்டலச் சுற்றுப் பயணத்தில் 7, 8 சனி ஞாயிறுகளிலாவது நீ வந்து பங்கு பெற்றால் நல்லது என்று நம்புகிறோம். விரும்புகிறோம். உன்னுடைய தொழில்நிலை இடந்தரா விட்டால் வரவேண்டாம்.

**குறிப்பு**:- சனிக்கிழமை முழுவதும் தஞ்சையில் இருப்போம். ஞாயிறு காலை தஞ்சையிலிருந்து அம்மாபேட்டை, சுந்தரபெருமால் கோயில், பாபநாசம் சென்று இரவு தாராசுரம் திருமஞ்சனகார வீதி ஸ்டாலின் வீடு வந்து தங்குகிறோம். திங்கட்கிழமை தாராசுரத்தில்

இருப்போம். செவ்வாய் காலை மாயவரம் செல்கிறோம். செவ்வாய் இரவு மாயவரத்திலிருந்து சென்னை திரும்புகிறோம்.

6. இந்தச் சுற்றுப்பயணத்தின் சிறப்பு என்னவென்றால் தமிழின உணர்வு, தமிழின விடுதலை உணர்வு, தன்மான உணர்வு, தமிழ்மொழி உணர்வு, தமிழ்மொழி விடுதலை உணர்வு, தமிழ்மொழியறிவு, தமிழ் இலக்கியப் புலமை, சமுதாயப் பொதுவுடமை நோக்கு, புதுமை நாடும் புரட்சிச் சிந்தை, ... முதலியவைகளை உடைய கலையுலக வாதிகள், இலக்கிய வாதிகள், சீர்திருத்த வாதிகள், பகுத்தறிவு வாதிகள், பொதுவுடமை வாதிகள், இந்திய தேசியக் கருத்தியல் வாதிகள், பத்தி உணர்வுமிக்க வாதிகள், நாத்திகர்கள், இந்திய அளவில் செயல்படும் இந்துமத இயக்கங்கள், RSS, VHP, BJP, சுயமரியாதை இயக்கத்தவர்கள், திராவிடக் கழகம், மற்றபடி எல்லாவகையான பேராசை வெறிகளுமுடைய, தனிமனிதர்களின் வேட்டைச் சத்திகளாக இருக்கும் அரசியல் கட்சிகள், கழகங்கள், இயக்கங்கள், பத்திநெறி வளர்க்கும் சபைகள், சங்கங்கள், மன்றங்கள், திருநெறிக் கூட்டங்கள், குழுக்கள், அந்தந்த வட்டார நிறுவன நிர்வாக அமைப்புக்கள், ... முதலிய அனைத்தையும் முன்கூட்டியே அறிவிப்புச் செய்து அழைப்பு விடுத்துச் சந்தித்துப் பேசும் நிகழ்ச்சிகள் நிறைந்திருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் மேலாக, அருட்பா கொடைவள்ளல், அருட்பெருஞ்சோதி ஆண்டவர், இராமலிங்க அடிகளாரின் பத்தர்களுக்கிடையிலும், திராவிடக் கழகத்தவர்களுக்கிடையிலும் நேருக்கு நேர் உடனுக்குடன் எல்லாவகையான ஐய வினாக்களுக்கும், அறிவு வினாக்களுக்கும் பதில் சொல்லும் செயல்திட்டமும் வகுக்கப் பட்டிருக்கிறது. மேலும், இரண்டு இடங்களிலாவது இ.ம.இ. பொதுக் கூட்டங்களும், இரண்டு இடங்களிலாவது இ.மு.க. பொதுக்கூட்டமும் நிகழ்த்திடுவதற்கு நம்மவர்கள் ஏற்பாடு செய்துள்ளார்கள். எனவே,

தாங்கள் தங்களுடைய விருப்பத்திற்கும், வசதி வாய்ப்புக்கும் ஏற்ப எமது இச்சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ள முயலுங்கள்.

7. தாங்கள் எம்மோடு அதிக நேரம் உரையாட முடியாமலும், எமது பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு எமது கருத்துக்களை கேட்க முடியாமலும் மிகவும் ஏக்கமுற்றிருப்பதால் இந்நெடிய அஞ்சல் வரையப்படுகிறது. எனவே, இதை தங்கள் கைப்படவே ஒரு நகல் கருப்பு வண்ண மையில் (பிளாக் இங்க்) எழுதி இயந்திரப்பிறதிகள் (xerox) தயாரித்து; குறைந்தது நூறுக்கு மேல் நமது இயக்க செயல்வீரர்களுக்கு வழங்கினுல் நல்லது. காலப்போக்கில் நமக்கு நல்ல வசதி வந்ததும் சிறிய நூலாகவே அச்சிட்டு விடலாம்.

8. <u>நாம் பழமையை அகற்றிப் புதுமையைப் புகுத்துவதற்காகப் புறப்பட்டிருப்பவர்கள் அல்ல</u>. இன்னும் சொல்லப் போனுல், <u>பொருளற்ற, பயனற்ற, தேவையற்ற, தேய்நிலையையும் ஓய்நிலையையும் தரத்தக்க புதுமைகளையெல்லாம் பூண்டோடு ஒழித்துவிட்டு பழமையைப் புகுத்தப் புறப்பட்டிருப்பவர்கள் நாம்</u>.

9. அருமை மகனே! நான்கு யுகங்களாக நமது முன்னோர்கள் வகுத்தளித்துள்ள வாழ்வியல் நெறிமுறைகளும், மரபுகளும், ஒழுகலாறுகளும், அகப்பண்பாட்டுப் பிடிப்புகளும், புறநாகரீகப் பழக்க வழக்கங்களும்; இந்தக் கலியுகத்தில் இரண்டாயிரமாண்டு கால இடைவெளிப் பரப்பில் புதுமை என்ற பெயரால் புகுந்தவைகளாலும், புகுத்தப் பட்டவைகளாலும் மிகப் பெரியபெரிய பாதிப்புக்களைப் பெற்று விட்டன. இவற்றை *'பயிரிடை முளைத்த களைகளை வேரோடு பிடுங்கி எடுத்து அகற்றுவது போல்'* முழுமையாக அகற்றியேயாக வேண்டும் நாம்.

இதற்காகவே, நாம், நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும் மிகமிகத் தெளிவாக, பெரும்பாலான நமது தாயக மக்கள் புரிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும். அதற்காக, நாம் இதுவரை

வெளியிட்டுள்ள சுமார் பத்து கோடிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ள அறிக்கைகள், அறிவிக்கைகள், சிறுசிறு வெளியீடுகள்.... முதலியவை நாம் எதிர்பார்த்த பயனை உருவாக்க வில்லை, உருவாக்க வில்லை, உருவாக்க வில்லை, உருவாக்கவே இல்லை.

எனவேதான், நாம், **சித்தர் கருவூரார் வாரவழிபாட்டு மன்றம்**, **சித்தர் கருவூரார் அருட்கோட்டம்**, **சித்தர் கருவூரார் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையம்**, **சித்தர் கருவூரார் கலை இலக்கிய வளர்ச்சிச் சங்கங்கள்**, **குருகுலம், தருகுலம், திருகுலம், கருகுலம்,... எனும் நான்கு வகைப்பட்ட பயிற்சி நிலையங்கள்,** ... முதலிய நிறுவன நிர்வாக அமைப்புக்களையெல்லாம் முறையாகத் தோற்றுவித்துப் பல ஆண்டுகள் நிறைவாகச் செயல்பட்டுப் பார்த்தோம். இவற்றாலும் நாம் எதிர்பார்த்த பயன் கிடைக்க வில்லை.

எனவேதான், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோற்றுவித்து மிகப் பெரிய சாதனைகளைச் சாதித்து விட்ட **இ.ம.இ.** எனும் **இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை**யும், **இ.மு.க.** எனும் **இந்து முன்னேற்றக் கழகத்தை**யும் மீண்டும் தோற்றுவித்து; மக்களிடையே செயலுக்குக் கொண்டு வரும் பணியை மேற்கொண்டுள்ளோம் யாம். ஆனால், நம்மிடம் போதிய பொருளாதார வசதி இல்லாத காரணத்தினால் நமது கொள்கை, குறிக்கோள், நமது வரலாறு, இவற்றை விளக்கும் இலக்கியங்கள் .... முதலியவற்றையெல்லாம் அச்சிட்டு அனைவருக்கும் வழங்க முடியவில்லை.

இக்குறை நீங்குவதற்காகத்தான் யாம் எம்மால் முடிந்தவரை பலரையும் எமது இருப்பிடத்திற்கு வரவழைத்தும்; பலரையும் எமது சுற்றுப் பயணங்களில் சந்தித்தும்; அவ்வப்போது கருத்துப் பரிமாற்றச் சிந்தனை அரங்கங்கள் நிகழ்த்தியும்; யோகாசன, ஓகாசனப் பயிற்சி முகாம்கள் நிகழ்த்தியும் வருகிறோம், வருகிறோம், வருகிறோம். இவற்றின் மூலம்தான் இப்பொழுதெல்லாம் நம்மைச் சந்திப்பவர்களும்,

நம்மைப் பற்றிச் சிந்திப்பவர்களும் கணிசமான அளவு பெருகியுள்ளனர்! பெருகியுள்ளனர்!! பெருகியுள்ளனர்!!! பெருகிக் கொண்டே உள்ளனர்! பெருகிக் கொண்டே உள்ளனர்!! பெருகிக் கொண்டே உள்ளனர்!!!

10. அன்பு மகனே! உன்னைப் போன்று என்னுடைய பணிகளில் அக்கறையும் ஆர்வமும் உடையவர்கள் விரல்விட்டு எண்ணிடக் கூடிய அளவு சிலராக இருக்கின்ற நிலையில் மிகப்பெரிய மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான்; இது போன்ற நெடிய அஞ்சல்களை அவ்வப்போது எழுதுகிறோம் யாம். மேலும், இதுபோன்ற அஞ்சல்களை எழுதுவதன் மூலம்தான் எமது சிந்தையின் சுமையும், நெஞ்சத்தின் ஏக்கமும் தற்காலிகமாகவாவது குறைகின்றன, குறைகின்றன, குறைகின்றன. ஏனென்றால், எமக்குத் தோல்வி மனப்பான்மை வந்துவிடக் கூடாது. எமது சிந்தையில் அயர்ச்சியும், தளர்ச்சியும் வளர்ச்சி பெற்றுவிடக் கூடாது. எமது முயற்சிகள் புகழ்ச்சியை எய்தாவிட்டாலும்; இகழ்ச்சிக்குரிய வீழ்ச்சியை எய்திவிடக் கூடாது என்ற நோக்கத்தில்தான் யாம் அயராது செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே, தாங்கள் தங்களால் முடிந்தவரை பலரையும் இ.மு.க.விலும், இ.ம.இ.யிலும் சேர்க்க முற்படுங்கள்.

11. இ.ம.இ. என்பது முழுக்க முழுக்க **இந்து வேதமும், இந்து வேதத்தின் நடைமுறையான இந்து மதமும்** வழங்குகின்ற இந்தியம், இந்து என்ற சொற்களால் குறிக்கப்படுகின்ற கொள்கைகளையும், குறிக்கோள்களையும் முழுமையாக மலர்ச்சியும், வளர்ச்சியும், செழிச்சி மிகு ஆட்சியும் பெறுமாறு செய்வதற்காக அருட்பணி ஆற்றுகிறவர்களைத் தயாரிக்கின்ற ஒரு நிறுவன நிர்வாக அமைப்பாகும். இந்த அமைப்பின் மூலம்தான் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் செயலகங்களாக உள்ள (192) நூற்றுத் தொண்ணூற்றிரண்டு வகைப்பட்ட கருவறைகளையும் தொடர்ந்து புத்துயிர்ப்பு செய்து பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டிட வேண்டும். இதற்காகவே, 48 வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும்; 48 வகைப்பட்ட

அருளாளர்கள், 48 வகைப்பட்ட அருளாளிகள், 48 வகைப்பட்ட அருளாடு நாயகங்கள், 48 வகைப்பட்ட மருளாளர்கள், 48 வகைப்பட்ட மருளாளிகள், 48 வகைப்பட்ட மருளாடு நாயகங்கள் எனும் ஆறுவகைப்பட்ட 288 அருட்கலைஞர்களையும்; 48 வகைப்பட்ட சித்தர்களையும், 14 வகைப்பட்ட சித்தியாளர்களையும் உருவாக்கும் பணியினைத் தொடர்ந்து விரிந்து விரைந்து நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம் யாம்.

12. எமது பணி தனிமனித முயற்சியாக நின்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான், 20 ஆண்டுக்காலத்திற்கு மேலாகவே பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், இதனோடு தொடர்புடைய 48 வகையான நிறுவன நிர்வாகங்களையும், இமயம் முதல் குமரி வரையுள்ள இந்துமத நாடு முழுவதும் பரவலாகப் பல இடங்களில் பலரின் கீழ் தோற்றுவித்து இலைமறை காயாகச் செயல்படச் செய்துள்ளோம் யாம். ஏனென்றால், இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் எண்ணற்ற எதிரிகளும், பகைவர்களும், விரோதிகளும், கணிசமான அளவு அடுத்துக் கெடுக்கும் அன்னியர்களும்; மிகப் பெரிய அளவில் இந்துமதத்தை நிலையாகச் சிதைத்துச் சீரழித்துக் கொண்டிருக்கும் புல்லுருவிகளும்; '*யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டது போல்*' இந்து மதத்துக்கு துரோகச் செயல்கள் செய்யும் அப்பாவி, ஏமாளி, கைக்கூலி இந்துக்களும் இருக்கிறார்கள்.

இவர்களுடைய முயற்சிகளை யெல்லாம் முறியடிக்க வேண்டுமென்றால்; முதலில் **இந்துமதம் வேறு, *ஹிந்துமதம்* வேறு** என்ற பேருண்மையினை இன்றுள்ள எல்லா இந்துக்களுக்கும் விளக்கிட வேண்டும். குறிப்பாக <u>பிறமண்ணினரான பிறமணர்கள் எனும் வடஆரியர்களுடைய சமசுக்கிருத வேத மதமான சனாதன தர்மம் எனப்படும் வருணாசிரமக் கொள்கையை உடைய பிறமண மதம்தான்</u>

ஹிந்துமதம் என்ற பெயரில் வாழுகிறது என்ற பேருண்மை நம் நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும், கடவுள் மறுப்பாளர்களுக்கும், வெறுப்பாளர்களுக்கும், மதச் சீர்திருத்த வாதிகளுக்கும், பகுத்தறிவு வாதிகளுக்கும் முழுமையாகப் புரியும்படிச் செய்ய வேண்டும்!, புரியும்படிச் செய்ய வேண்டும்!, புரியும்படிச் செய்ய வேண்டும்!.

13. இப்படி யாம் கூறுவதற்குக் காரணம், இந்தியாவில் புத்தரும், மகாவீரரும் தோன்றியதற்குக் காரணமே பிறமண்ணினரான பிருமணர்களின் *ஹிந்துமதத்தை* எதிர்ப்பதற்காகத்தான். ஏனென்றால், இந்த பிருமணர்களின் *ஹிந்துமத*த்தில்தான் அறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களும், செய்திகளும், சடங்குகளும், பழக்க வழக்கங்களும், நம்பிக்கைகளும், ஆபாசமான கற்பனைகளும், மடமை நிறைந்த புராண இதிகாசங்களும் மிகுதியாக இருக்கின்றன, மிகுதியாக இருக்கின்றன, மிகுதியாக இருக்கின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக, இந்த *ஹிந்துமத*த்தில்தான் அவர்களுடைய சமசுக்கிருத வேதத்திற்குரிய பல கடவுள்களும்; அதே நேரத்தில், அனைத்துமே மாயம் எனும் மாயாவாதக் கொள்கையும், ஒவ்வொரு மனிதனும் பிரம்மம், கடவுள் எனும் பிறம்மவாதக் கொள்கையும், பல்வேறு கடவுள்களுக்குரிய வகைவகையான பூசைமுறைகளும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு *ஹிந்துமத*த்தைப் பற்றிய குழப்பமான, தெளிவே இல்லாத செய்திகளை வழங்குகிறது.

இவற்றோடு போட்டி போடும் வண்ணம் இந்த *ஹிந்துமத*த்தின் தலைவர்கள் 'ஒரே ஒரு கடவுள்தான் உண்டு' என்ற கடவுட் கொள்கையைப் பரப்பி வருவதும் ஆகும். இப்படி இந்துமதத்தின் தெளிவில்லாத, முரண்பாடுகள் நிறைந்த, எல்லையில்லாத வேறுபாடுகள் விரவிக் கிடக்கின்ற மடமை நிறைந்த போக்குகளாலும், நோக்குகளாலும்தான் மதமறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும், எதிர்ப்பாளர்களும், நாத்திகர்களும் மிகுதியாகத் தோன்றிக் கொண்டிருக்கும் நிலை உருவாயிற்று! உருவாயிற்று! உருவாயிற்று!

இப்பேருண்மையை உணர்ந்துதான்; பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியரின் சமசுக்கிருத வேதங்களாலும், சாத்திரங்களாலும், சடங்குகளாலும், புராண இதிகாச ஆபாசங்களாலும், வருணசிரமக் கொள்கையாலும், சனதன தர்மக் கோட்பாட்டாலும் மக்களை மதத்தின் பேரால் ஏமாற்றிச் சுரண்டி வாழும் சூழ்ச்சிப் போக்காலும்தான் இந்தியாவிலேயே புத்தமும், சமணமும் தோன்றி *ஹிந்துமதத்தை* எதிர்க்க ஆரம்பித்திட்டன. இந்த இந்தியாவிற்குள் வந்திட்ட யவனம், எகிப்தியம், எபிரேயம், சோனகம், சீனம்... முதலிய பல அன்னிய மதங்களும் இந்த நாட்டில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் பிருமணர்களால் உருவாக்கப்பட்ட *ஹிந்துமதத்தை* முழுமூச்சாக எதிர்த்துப் போராடின.

அப்படி இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வடஆரியரின் சமசுக்கிருத வேதமதத்திற்குரிய சனதன தருமம் எனப்படும் *ஹிந்துமதத்தை* இந்தியாவில் தோன்றிய மதங்களும், இந்தியாவிற்கு வந்த அன்னிய மதங்களும் தொடர்ந்து எதிர்த்துப் போராடிய காரணத்தினுல்தான் *ஹிந்துமதத்தின்* மடமைகளும், மூட நிலைகளும், அறியாமை நிலைகளும், ஆபாச நிலைகளும், பயனற்ற நிலைகளும், கற்பனை நிலைகளும் இந்திய மக்களுக்கு விளங்க ஆரம்பித்தன.

14. இப்படி பிறமண்ணினரான பிருமணரின் *ஹிந்துமதத்தின்* முறைகேடான, குறைபாடான, பகுத்தறிவுக்கு ஒவ்வாத பயனற்ற நிலைகளையெல்லாம் புரிந்து கொள்ளும் வாய்ப்பும், வசதியும் இந்திய மக்களுக்கு ஏற்பட்ட காரணத்தினுல்தான்; இந்தியாவில் நாத்திகர்களும், மதமறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும், எதிர்ப்பாளர்களும் விரைந்து விரிந்து நாடு முழுவதும் பரவலாகத் தோன்றலானுர்கள். இப்படிப்பட்ட நிலையில்தான் இந்த நாட்டிற்கு இசுலாம் மதமும், கிறித்தவ மதமும் வெளிநாட்டிலிருந்து வந்தன.

15. நம் இந்திய மக்கள் கடவுள் நம்பிக்கை நிறைந்தவர்கள், பத்தியுணர்வு ஊற்றெடுக்கும் வாழ்க்கை வாழவே துடிதுடிப்பவர்கள். எனவே, இவர்கள் நாத்திகர்களிடமிருந்தும், மத மறுப்பாளர்களிடமிருந்தும், மத வெறுப்பாளர்களிடமிருந்தும், மத எதிர்ப்பாளர்களிடமிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொண்டு கடவுள் நம்பிக்கையுடைய மத வாழ்க்கை வாழ விரும்பிப் புதிதாக வந்த இசுலாம் மதத்திலும், கிறித்தவ மதத்திலும் பெருவாரியாகச் சேர்ந்தார்கள்.

16. இப்படி, இந்திய மக்களில் பெருவாரியான மக்கள் புதிய மதங்களை விரும்பி ஏற்றுக் கொள்வதைக் கண்டுதான்; மேற்படி இரு மதத்தவர்களும் தங்களுடைய அரசியல் அதிகாரம், பொருளாதார வளத்தின் வலிமை என்ற இரண்டையும் துணையாகக் கொண்டு அச்சுறுத்தியும், இச்சகம் பேசியும் கணிசமான அளவு இந்துக்களை தங்கள் மதங்களுக்கு மாற்றி விட்டனர்.

17. இப்படிப்பட்ட மதமாற்றுப் பணிகள் தொடர்ந்து இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கின்றன; இனியும் நடக்கும். எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கம் மீண்டும் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டு **இந்தியாவின் மூல மதம் ஹிந்துமதமல்ல, இந்துமதமே** என்ற பேருண்மையையும்; **இந்தியாவின் அருளுலக ஆட்சிமொழி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியே தவிர பிரமணர்களின் சமசுக்கிருத மொழியல்ல** என்ற பேருண்மையையும்; **சாதிப் பாகுபாடுகள் இந்தியாவின் இந்துமதத்திற்குரியவை அல்ல** என்ற பேருண்மையையும்; **ஒரே கடவுட்கொள்கை இந்தியாவின் இந்து மதத்திற்குரியவை அல்ல** என்ற பேருண்மையையும்; **இந்தியாவினுடைய இந்துமதம் நான்கு யுகங்களாக, அதாவது 43,73,093 (1992 வரை) ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற ஒன்று** என்ற பேருண்மையையும்; ... விளக்கியுரைத்திடும் பணியைச் செய்து வருகிறது.

இதை உணர்ந்து இன்றைய மக்களில் ஆர்வமுடையவர்கள் இந்துமத வரலாறு, இந்துமத வாழ்வியல், இந்துமத இலக்கியங்கள் (36), இந்துவேத நூல்கள் (396) முதலியவைகளையெல்லாம் முறையாகப் பயின்று அருளுலக வாழ்க்கை வாழ்ந்து இந்துமதத்தை மலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் பெறச் செய்வதற்காகத்தான் இ.ம.இ. தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தங்களைப் போன்றவர்கள் நம் நாட்டில் வாழும் பத்தியாளர்களுக்கும், சத்தியாளர்களுக்கும், சித்தியாளர்களுக்கும், முத்தியாளர்களுக்கும் புரிய வைத்திட வேண்டும்.

18. இப்பொழுது நாம், நம் நாட்டில் உள்ள சமுதாய வாதிகளும், சமுதாயத் தொடர்பான நிறுவன நிர்வாகங்களும்; கலை இலக்கிய அரசியல் தொடர்பான நிறுவன நிர்வாகங்களோடு தொடர்பு கொண்டு கண்மூடித்தனமான போக்கில் செயல்பட்டதால் ஏற்பட்டுவிட்ட பண்பாட்டுச் சீரழிவுகளையும், சிதைவுகளையும், நாகரீகக் கட்டுக்கோப்பு முறிவுகளையும், தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு முதலிய நான்கு வகைப்பட்ட வாழ்வுகளிலும் ஏற்பட்டுவிட்ட கலக்கங்கள் நிறைந்த, குழப்பங்கள் மிகுந்த, வெறிகள் வளர்ந்த மோசமான, மோசடியான, அவலமான, கேவலமான நிலைகளைக் கண்டு வருந்தித்தான்; இந்துவேத வழியிலும், இந்துமத வழியிலும் கலை இலக்கிய அரசியல் சமுதாயத் துறைகளைச் செம்மைப் படுத்துவதற்காகத்தான் இலைமறைகாயாக இருந்த **இ.மு.க.** எனும் **இந்து முன்னேற்றக் கழகத்தை** வெளிவந்து நேரடியாகச் செயல்படச் செய்ய நேரிட்டுள்ளது.

அதாவது, நாத்திகர், மத மறுப்பாளர், கடவுள் வெறுப்பாளர், சீர்திருத்தவாதி, பகுத்தறிவாளர், மொழியுணர்வுடையவர், இலக்கிய நாட்டமுடையவர்.... முதலியவர்கள் எல்லாம் நேரடியாக பகுத்தறிவு நோக்கையும், விஞ்ஞானச் சூழலையும் உடைய இந்துவேதக் கருத்துக்களையும், இந்துமத நடைமுறைகளையும் தெரிந்து, புரிந்து, விரும்பி ஏற்றுப் புதிய சமுதாய அமைப்பையும், புதிய அரசியல்

அமைப்பையும் உருவாக்கப் பாடுபடுவதற்காக, ஒன்றுதிரண்டு ஒற்றுமைப்படுவதற்குரிய நிலையினை உருவாக்குவதற்காகத்தான் **இந்து முன்னேற்றக் கழகம்** செயலுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது.

19. அதாவது, இந்து முன்னேற்றக் கழகம் என்பது அதிகமாக மதத்துறையில் ஈடுபடாமல் சமுதாயப் பணிகளையும், அரசியல் பணிகளையும் செய்வதற்கென்றே செயல்படப் புறப்பட்டிருக்கும் நிறுவனமாகும். இந்த நிறுவனம், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தினின்று வேறுபட்ட புதிய நிலையில்தான் செயல்படும், செயல்பட இருக்கிறது.

20. இப்பேருண்மையினை பதினெண்சித்தர் மடத்தில் தயாராகியுள்ள தங்களைப் போன்றவர்கள் முழுமையாகப் புரிந்து, பிறருக்கு முழுமையாகப் புரிவிக்கும் பணியில் ஈடுபடல் வேண்டும். அப்பொழுதுதான், இ.மு.க. மிக விரைவில் விரிந்த வளர்ச்சிகளைப் பெற்று பதினெண்சித்தர்களுடைய கொள்கையும், குறிக்கோளுமான அருளாட்சியை அமைக்க முடியும்! அமைக்க முடியும்!! அமைக்க முடியும்!!! அமைக்க முடியும்!!!!

21. அன்பு மகனே! திருவருட் செல்வ! சமயக்குரவர் நால்வரின் திருத்தோன்றலே! இந்துவேதம் பரப்பும் நாயகமே! சித்தரடியார் த. கேசவனே!.... பல்வேறு அலுவல்களுக்கிடையிலும், வரலாற்றுச் சிறப்பு மிக்க தஞ்சை மாவட்ட நான்கு நாள் சுற்றுப் பயணத்திற்கிடையிலும், இந்து வேதத்தின் மூலமந்தரமாகக் கருதப்படும் சீவகாயந்திரி மந்தரம் எழுதப்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய ஓகாசன, யோகாசன நிட்டை நிலையிலும்; உனக்கிந்த நெடிய அஞ்சல் எழுதப்படுகின்றது என்றால்!?!?!?; இந்த அஞ்சலின் சிறப்பையும், தங்களுக்குப் பதினெண்சித்தர் மடத்தில் தரப்படுகின்ற சிறப்பையும் தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்! தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்!! தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்!!! எனவே, தாங்கள் இந்த அஞ்சலுக்குப் பல நகல்கள் எடுத்துப் பலருக்கும் அனுப்புவதோடு,

பதினெண்சித்தர் மடத்திற்கும் பல நகல்கள் அனுப்புவதோடு; தாங்கள் இதுவரை நல்கி வரக்கூடிய தாராளமான பொருளுதவிகளோடு தாங்களும் நேரடியாக அவ்வப்போது மின்னல் வேகத்திலாவது எமது சுற்றுப் பயணங்களில் தோன்றித் தோன்றிச் செயல்பட வேண்டும் என்பதே கருத்தாகும்.

22. **<u>இ.மு.க.விற்கு எக்காரணம் பற்றியும் மற்ற சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் துறை கட்சிகளைப் போலவோ, கழகங்களைப் போலவோ, இயக்கங்களைப் போலவோ குறுகிய கால எல்லைக்குள் மிகப் பெரிய வளர்ச்சி அல்லது வெற்றி ஏற்பட்டு விடக்கூடாது, ஏற்பட்டு விடக்கூடாது, ஏற்பட்டு விடக்கூடாது, ஏற்பட்டு விடவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! என்பதுதான் நமது மிகத் தெளிவான நோக்கும் போக்குமாகும்!</u>** ஏனென்றால், இந்த இருபதாம் நூற்றாண்டில் நம் கண்முன்னால் மிகப் பெரிய பெரிய புரட்சிகளைச் செய்து அரிய பெரிய வெற்றிகளையும், சாதனைகளையும் அடைந்த சமய சமுதாய அரசியல் கலை இலக்கியத் துறை கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் சற்றும் எதிர்பாராத வகையில் மிகப் பெரிய தோல்விகளையும், வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும், இகழ்ச்சிகளையும் அடைய நேரிட்டுவிட்டது, அடைய நேரிட்டுவிட்டது, அடைய நேரிட்டுவிட்டது. அப்படியோர் அவலக் கேவல நிலை நமது இ.மு.க.விற்கு என்றென்றைக்கும் வந்துவிடக் கூடாது, வந்துவிடக் கூடாது, வந்துவிடக் கூடாது.

அதாவது, நமது இ.மு.க.விற்கு மிகமிகத் தெளிவான கொள்கை விளக்கமும் செயல்திட்டமும் இருக்கின்றன. அதாவது, <u>இந்து வேதத்தின் 396 நூல்களும், இ.மு.க.வின் கொள்கைவிளக்க நூல்களாகும்</u>; <u>இந்து மதத்தின் 36 நூல்களும் இ.மு.க.வின் செயல்திட்ட நூல்களாகும்</u>. **இப்படியுள்ள 432 நூல்களின் தத்துவங்களின் அடிப்படையில்தான், தத்துவங்களின் வழிகாட்டலில்தான், தத்துவங்களின் வழித்**

**துணையில்தான் நமது இ.மு.க. என்றென்றைக்கும் வாழும், வாழ்ந்திடும்; வாழும், வாழ்ந்திடும்; வாழும், வாழ்ந்திடும். அதாவது, நமது இ.மு.க.வின் தலைமை, தத்துவத்தின் தலைமையாக இருக்குமே தவிர; ஒரு தனிமனிதனின் தலைமையாக இருக்காது, இருக்காது, இருக்காது, இருக்கவே இருக்காது.**

23. இந்த மேற்படிச் சொற்றொடரும், சொற்றொடரின் கருத்தும் வரலாற்றுப் பூர்வமானவை என்பதை நம்மவர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, கி.மு.100 முதல் கி.பி.150 வரை வாழ்ந்திட்ட இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் எனும் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் தனிமனிதராக இ.மு.க.வை நடத்திய காலத்து; நாட்டில் நிகழ்ந்துவிட்ட நிலவிட்ட சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இ.மு.க.வின் கொள்கைக்குரிய இந்துவேத நூல்களிலிருந்தும், இந்துமத நூல்களிலிருந்தும் தமக்குத் தேவையான தத்துவ விளக்கத்தைத் தருமாறு ஆதிசிவனாரையே வரவழைத்திட்டார். அப்படி ஆதிசிவனார் நேரில் வந்து வழங்கிய வேதமான ஆதிசிவனாரின் இந்துவேதம்தான் சுமார் (ஆயிரம்) 1000 ஆண்டுகளாக இ.மு.க.வை முழுமையான வளத்தோடும், வலிவோடும், பொலிவோடும் செயல்படச் செய்தது.

பிறகு மீண்டும் இ.மு.க. செயல்நலம் குன்றியதைத் தடுப்பதற்காக கி.பி.785 முதல் கி.பி.1040 வரை வாழ்ந்திட்ட இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம், குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தம் காலத்து பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு மதங்களாலும், உள்நாட்டு, வெளிநாட்டு மொழிகளாலும், அன்னியர்களின் சூழ்ச்சிகளாலும், சதிகளாலும், உள்நாட்டு அப்பாவிக் கைக்கூலிகளின் துரோகங்களாலும்; இந்து

வேதமும், இந்து மதமும் மிகப் பெரிய அளவில் மக்களால் மறக்கப் பட்டும், துறக்கப் பட்டும், மறுக்கப் பட்டும், வெறுக்கப் பட்டும், எதிர்க்கப் பட்டும், பகைக்கப் பட்டும், நகைக்கப் பட்டும், இழிக்கப் பட்டும், பழிக்கப் பட்டும் மிகுந்த அளவில் செயல்நலம் குன்றியும் விட்டன.

அவற்றைச் சரிசெய்வதற்காக நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய பாடலை வெளிக் கொணருவதற்காகவும் பதினெண் மேல்கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண் மையக்கணக்கு நூல்கள்,.... முதலிய நூல்களையெல்லாம் வெளிக் கொணருவதற்காகவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அவர் எதிர்பார்த்த பயனை அளிக்காததால் இ.மு.க.விற்கு தலைமை தாங்கவும், வழிகாட்டவும், வழித்துணையாக இருக்கவும் தம் காலத்திய நிலைகளுக்கேற்ப திருந்திய புதிய தத்துவம் தேவை என்று பிறமணிடம் வேண்டிக் கொண்டார். அதன் பேரில், முன்பு ஆதிசிவனுர் இம்மண்ணுலகில் ஐந்தாறு ஆண்டுகள் தங்கி பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கு இந்துவேதத்தை எழுதிக் கொடுத்தது போல், பிறமணும் இம்மண்ணுலகிற்கு வந்து அனைத்து வகையான உலகியல் சூழ்நிலைகளையும் முழுமையாக ஆராய்ந்து இந்து வேதத்தின் 396 நூல்களிலிருந்தும், இந்து மதத்தின் 36 நூல்களிலிருந்தும் தேவையான கருத்துக்களைத் தொகுத்து நான்கு ஆண்டு கால எல்லையில் திருவரங்கத்து முக்கொம்புக் காட்டில் **பிறம வேதம்** எனும் தத்துவத்தை எழுதிக் கொடுத்தார்.

அந்த **பிறம வேத**த்தின் அடிப்படையில்தான், பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி இந்து மதத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும் அடையச் செய்து இந்து மதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும், விதைப் பண்ணைகளாகவும், நாற்றுப் பண்ணைகளாகவும் உள்ள தமிழர்களையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒற்றுமைப்படுத்திப் பிற்காலச் சோழப் பேரரசு எனும் இந்துமத

அருட்பேரரசை உருவாக்கினர். அந்த இந்துமத அருட்பேரரசின் மூலம் விண்ணுயர்ந்த கண்கவர் கோபுரங்களை உடைய கோயில்களை குமரி முதல் இமயம் வரை கட்டினர். ஏற்கனவே, இந்துமதக் கோயில்கள் குமரி முதல் வேங்கடம் வரைதான் நிறைய இருந்தன என்பதால்; அந்த ஆயிரமாயிரம் மூலக் கோயில்களையெல்லாம் **கற் கோயில்களாகப்** புதுப்பித்தார். அவற்றைப் பாதுகாப்பதற்காக **சொற் கோயில்களாக** நூற்றுக் கணக்கான புதிய நூல்களை எழுதியும், ஆயிரக்கணக்கில் பழைய நூல்களைப் புதுப்பித்தும் செயல்பட்டார்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் கண்காணிப்பாளர்களாக, திருத் தொண்டர்களாக, காவலர்களாக, பாதுகாப்புச் சத்திகளாக, குமரி முதல் இமயம் வரை தன்னுடைய அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் மூலம் வகைவகையான நிறுவன நிர்வாகங்களை மடங்கள், பீடங்கள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார சந்நதிகள், பண்டார சந்நிதிகள், அரியவாள்கள், கூரியவாள்கள், சீரியவாள்கள், பெரியவாள்கள், நேரியவாள்கள், வீரியவாள்கள், ஆச்சாரியார்கள்,... முதலியோர்களையெல்லாம் உருவாக்கினர்.

24. இப்படியெல்லாம் அவர் செயல்பட்டும், **'கள்வன் பெரியோனா?! காப்போன் பெரியோனா?!'** என்ற மூதுரையின்படி இந்துவேதத்தின் வாழ்வும், இந்துமதத்தின் வாழ்வும் கேள்விக்குரியதாகவும், ஆச்சரியத்திற்குரியதாகவும் ஆயிற்று. அதாவது, அண்டபேரண்டங்களில் வாழும் பதினெண்சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் வழங்கிய இந்துவேதமும், இந்து மதமும் எதிரிகளாலும், துரோகிகளாலும் மிகப்பெரிய பாதிப்புக்களைப் பெற்றுச் செயல்நலம் குன்றிவிட்டன.

இப்பொழுது பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக, இந்துமதத் தந்தையாக, இந்துவேத நாயகமாக, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூராகத் தோன்றியுள்ள யாம், ஆதிசிவனுரின் இந்துவேதத்தை அடிப்படையாகக் கொண்டு இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும் பாடுபடுவதற்காகவே மீண்டும் இ.ம.இ.யைத் தோற்றுவித்துள்ளோம். இதேபோல், இந்துக்களின் சமுதாய வாழ்வையும், அரசியல் வாழ்வையும், கலே இலக்கியத் தொழில்துறை வாழ்வுகளேயும், மற்ற வாழ்வியல்களேயும் செம்மைப் படுத்துவதற்காக; பிறமண் வழங்கிய பிறம வேதத்தின் அடிப்படையில் இ.மு.க.வை மீண்டும் தோற்றுவித்துள்ளோம். எனவே, எமது வெற்றி தோல்விகள் தனிமனித வெற்றி தோல்விகளாக இருக்க முடியாது, இருக்க முடியாது, இருக்க முடியாது, இருக்கவே முடியாது.

25. அதாவது, எம்மைப் பொறுத்தவரை; யாம் எமது அக, புற வாழ்வியல்களேயும், செயல்நிலேகளேயும் பதினெண்சித்தர்களின் சித்தர்நெறியெனும் சீவநெறியான இந்து வேதமும், இந்து மதமும் வழங்கிடும் தத்துவத்தின் வெளிப்பாடாகவே நிகழ்த்தி வருகிறோம். எனவேதான், யாம் முழுக்க முழுக்கத் தத்துவ நாயகமாகவும், தத்துவ வித்தாகவும், தத்துவ வாரிசாகவும், தத்துவ விளக்கமாகவும் வாழுகிறோம், எண்ணுகிறோம், சிந்திக்கிறோம், செயல்படுகிறோம். அதனுல்தான், யாம், எமது முயற்சிகளுக்கு மிகக் குறுகிய கால அளவுக்குள் மிகப் பெரிய பெரிய வெற்றிகள் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்படவில்லே, எதிர்பார்க்க வில்லே.

26. அதாவது அன்பு மகனே! எம்மால் உருவாக்கப் பட்டுள்ள ஆயிரமாயிரம் சித்தரடியான்களும், சித்தரடியார்களும், இ.ம.இ.யின் வெற்றிக்காகவும், இ.மு.க.வின் வெற்றிக்காகவும் முயற்சிக்க வேண்டும். முயற்சிக்க வேண்டும், முயற்சிக்க வேண்டும். ஒருவேளே எம் காலத்துக்குள் நமக்கு முழுமையான வெற்றி கிடைக்கா விட்டால்;

நமது நாளைய வழிவழி வாரிசுகள் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்படி மிகமிகத் தெளிவான வரலாறுகளையும், இலக்கியங்களையும், செயல்திட்டங்களையும் உருவாக்கிச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நூறுயிரக் கணக்கில் அஞ்சல் வடிவக் கட்டுரைகளையும்; ஆயிரக் கணக்கில் கட்டுரைகளையும், நூற்றுக் கணக்கில் நூல்களையும் தொடர்ந்து எழுதிக் குவித்து வருகிறோம் யாம். இவற்றைப் புரிந்து செயல்படுங்கள்.

முடிந்தால் தஞ்சைக்கு வரவும். எம்மைச் சந்திக்கவும்.

**தலைவர்**
**குருதேவர்**
**ஞானத்தந்தை**
**அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்**
**குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்**
**இந்துமதத் தந்தை, இந்து வேத நாயகம்**
**இ.ம.இ., இ.மு.க.வின் பாரம்பரியத் தலைவர்**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி**
**இந்துவேத பாடசாலை அலுவலகம்**
**வரதராசபுரம், அம்பத்தூர்,**
**சென்னை - 53.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# மாற்றமே அறிவு வளர்ச்சி

## மக்கள், மதம், அரசியல்

## People, Religion and Politics

வழங்கப்பட்ட வழிகளும், வகைகளும், கருவிகளும், கருத்துக்களும், கொள்கைகளும், குறிக்கோள்களும், ... வாழுகின்ற நிகழ்கால வாழ்வுக்குப் பயன் பல வழங்கக் கூடியவையா? என்று ஆராய்வதே அறிவுடமை. இதை விடுத்து முன்னோரின் முடிவு, ஆன்றோரின் ஆய்வு, சான்றோரின் சால்பு அருந்திறல், பெற்றோரின் விருப்பு, பெரியோரின் அறிவுரை, நெறி மிக்கோரின் அறிவுரை ... என்று ஒவ்வொன்றுக்கும் பழமைச் சிறப்பு அளித்திட்டால் அது பகுத்தறிவைப் படுகுழிப் படுத்தும்.

மனிதனின் மனதிலே பிறந்த மகிழ்ச்சி, இகழ்ச்சி, புகழ்ச்சி, ... முதலிய ஆற்றல்மிகு உணர்வுகள் மனிதனின் புறவாழ்வில் நெகிழ்ச்சியை நிலைநாட்டின. அவற்றால் நேர்ந்ததே நெருங்கி வாழும் வாழ்வு. அது, 'மதம்' என்றும், 'அரசியல்' என்றும் இரு பெரும் அடிப்படைகளைக் கொண்டு உருவானது; அப்படி உருவானதுதான் சமுதாயம் (Society). எனவேதான், மதத்தையோ, அரசியலையோ சமுதாயத்தை விட்டுப் பிரிக்க முடியாது.

இருந்தும், மதம் அரசியலே இல்லாமல் வாழ முடியும் என்றும்; அரசியல் மதமே இல்லாமல் வாழ முடியும் என்றும் கூறி ஒன்றையொன்று வெறுத்தொழிக்க முற்படுகின்றன. இந்த அடிப்படையில்தான் முதலாளித்துவ மதத்தை ஆதரிப்பது; பொதுவுடமை மதத்தை வெறுத்தொழிப்பது என்று வடிவம் பெற்றன. ஆழ்ந்து சிந்தித்தால் மதம் அரசியலாக இயங்குகிறது என்பதையும்,

அரசியல் மதமாக வாழுகிறது என்பதையும் உணரலாம். அதாவது, இரண்டும் பெயரளவிலே வேறுபடுகின்றன என்பதாகும்.

இப்படிச் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மதக் கருத்துக்களையும், மதவாழ்வுகளையும்; அரசியல் கருத்துக்களையும், அரசியல் வாழ்வுகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது, தெரிந்தவரே புரிந்தவராக முடியும். அப்படிப் புரிந்தவராக வாழ்ந்தவர்கள் உலகெங்கிலுமே தோன்றியிருக்கின்றனர். இருந்தாலும், அவர்களின் [மீது] 'மதம்' அல்லது 'அரசியல்' என்னும் வண்ணம் பூசப்பட்டிடுவதால் அவர்களின் உண்மை உருவம் உணரப்படாமல் போய்விடுகிறது.

காடுகளில் அலைந்தவன் இன்பதுன்பங்களையும், பிற அறிவியல் நெறிகளையும் நேரடியாகத் துய்த்து உணர்ந்து தெளிந்தான். அவன், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று எண்ணினான். அப்படியவன் எண்ணியதால் பட்டறிவு ஏட்டறிவாயிற்று. [Experience converted as Book knowledge]. எனவே, பிற்கால மனிதன் எதையும் நேரடியாகத் துய்த்துணரும் வழக்கத்தையும், வாய்ப்பையும், வசதியையும் இழந்தான். அதனால், பிற்கால மனிதன் இந்த இழப்பை ஈடுசெய்ய வேண்டியவன் ஆயினான். அதற்காகத்தான் இவன், நாட்டில் வாழ்ந்த போதும்; காடுகளில் வாழ்ந்த மனிதன் ஏடுகளில் எழுதிச் சென்றவற்றில் ஈடுபாடு காட்டலானான். இருந்தாலும் உயிரும், உணர்வுமற்ற ஏட்டுக் கல்வியால் இவனுடைய உள்ளத்தைத் தொட முடியவில்லை.

அதாவது, உள்ளத்தைத் தொடாத ஏட்டுக் கல்வியே இவனுக்குத் துணையாக அமைய நேரிட்டது. எனவே, இவன் தன்னுடைய தேவை அனைத்துக்கும் உரிய அறிவை ஏட்டுக் கல்வியிடமிருந்து எதிர்பார்த்தான். அது, எதிர்பாராத ஏமாற்றத்தையே அளித்தது. ஆகவே, ஏட்டுக் கல்வி இவனுடைய உள்ளத்தை உலைக் கூடமாக்கிச்

சிந்தையைச் சிறப்புக்குரிய கலைக்கூடமாக்கத் தவறிவிட்டது. இதனால், மனித வாழ்வு கவலை என்ற வலை கொண்டு, தொல்லை என்னும் மீன் பிடிக்கும் தொழிலாயிற்று. அதாவது, **களிமிகு கலையாக வடிவெடுக்க வேண்டிய மனித வாழ்வு; கவலைமிகு தொழிலாக உருவெடுத்தது**. இத்தோல்விதான், ஆயிரமாயிரம் ஆண்டுகளாகியும் மனிதனை மனிதனாக முடியாமல் செய்து விடுகிறது.

மனிதன் தோல்விக்குக் காரணமான ஏட்டுக் கல்வியை எடுத்தெறிய முடியவில்லை. மனிதனின் தோல்வியைத் தோல்வியுறச் செய்யும் நாட்டுக் கல்வியைப் [அனுபவக் கல்வி = Experience Knowledge] பட்டறிவின் மூலம் வளர்க்கும் முறையை முழுக்கக் கடைப்பிடிக்கவும் முயலவில்லை. ஏட்டிலிருப்பவை நாட்டு நடப்பிலும்; நாட்டு நடப்பிலுள்ளவை ஏட்டிலுமாக இருக்கக் கூடிய நிலை உருவாக வேண்டும். அதற்காக முயன்று வருபவரின் பட்டியலே சரிவர வெளித் தெரிவதில்லை. அப்படிப் பல சிந்தனைச் சிற்பிகள், கருத்துக் கருவூலங்கள், பகுத்தறிவுப் பாசறைகள், சீர்திருத்தச் செம்மல்கள், செயல்வீரர்கள் ... உலகால் உணரப்படாமல் போயினர். அக்குறைதான் மனிதனை நிறைவு பெற முடியாமல் தடுக்கின்றது.

இதையுணர்ந்தே இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு உலகம் மறந்தவர்களையும், மறுத்தவர்களையும், மறைந்தவர்களையும் உலகுக்கு நினைவுபடுத்தும் பணியில் விரிவாகவும், விரைவாகவும் ஈடுபட்டிருக்கின்றது. அப்பணியினை அணிபெறச் செய்யும் பணிகளுள் ஒன்றே இந்நூல்.

எம்.என்.இராய் தனது கருத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஏட்டுக் கல்வியை விட நாட்டுக் கல்வி உயர்ந்தது என்பதை மெய்ப்பித்தவர். அதோடு அவர் நாட்டுக் கல்வியைக் கற்கும் முறையையும், நாட்டுக் கல்வியை ஏட்டுக் கல்வியாக்கும் முறையையும், நாட்டுக் கல்வியும் ஏட்டுக் கல்வியும் இணைந்திருக்கும் வகையையும்

தெளிவாக விளக்கிச் சென்றுள்ளார். அவரளித்துச் சென்ற விளக்கங்கள், மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற முயற்சிகளுள் ஒன்றே இந்நூல்.

## இந்நூல் எப்படிப் பிறந்தது?

இந்நூலின் சீர்திருத்தச் செம்மல், கருத்துக் கருவூலம், பகுத்தறிவுப் பாசறை, புதுமையின் பிறப்பிடம், புரட்சியின் இருப்பிடம், பொதுவாழ்வின் பேரிலக்கியம், அரசியல் உலகுக்கோர் கலைக் களஞ்சியம், அறிவுக்கோர் பெருவிருந்து, தாய் நாட்டுக்கோர் எடுத்துக்காட்டு, விடுதலை வேட்கைக்கோர் வீர வரலாறு, சிந்தனைச் சோலை, ... என்று பலபடியாய் பாராட்டுவதற்குரிய பயன்மிக்க வீர வாழ்க்கை வாழ்ந்து சென்ற அறிவுலகப் பெருவீரர் எம்.என்.இராயின் வரலாற்றை மையமாகக் கொண்டு உலகுக்குத் தேவையான கருத்துக்கள் அமைந்துள்ளன.

எம்.என்.இராய் அவர்கள் இப்படித்தான் அமைய வேண்டும் என்று எண்ணினரா? என்று அறுதியிட முடியாது. ஆனல், இந்நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் அவருடைய எண்ணமே அடிப்படையாகும். அதனல்தான், இந்நூலை எண்ணத்தளவில் உருவாக்கியவர் எம்.என்.இராய். அதைச் சொல்லளவில் உருவாக்கியவர் எம் தந்தை [ம.பழனிச்சாமி பிள்ளை]. அதைச் செவிமடுத்து எழுத்தளவில் உருவாக்கியவன் நான். இப்படி மூன்று பேரால் உருவாக்கப்பட்ட இந்நூலில் மூவரின் சொந்தக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன என்பது வெளிப்படை. இருப்பினும் மூவரின் கொள்கைகளும், குறிக்கோள்களும் ஒரே தன்மைத்தன. எனவே, எண்ணியவர், சொல்லியவர், எழுதியவர் என்று இந்நூலாசிரியர் மூவராயினும்; இந்நூல் உலகைப் பிடித்தாட்டும் குழப்பம், கலக்கம்,

மயக்கம், பகைமை, போராட்டம், போர், இனவெறி, நாட்டுவெறி, ... முதலியவற்றை அடியோடு அகற்றிடப் பேருதவியாய் இருக்கும்.

ஒருவன் மாற நேரிடுகிறது; தன்னை அறியாமல் தானே மாறுகிறான். ஒருவன் மாற்றிக் கொள்ள வேண்டிய இன்றியமையா நிலை உருவாகிறது; தானே விரும்பித் தன்னை மாற்றிக் கொள்ளுகிறான். ஒருவன் எதிர்பாராமல் மாற்றப்படுகிறான்; அவன் அம்மாற்றத்தை ஏற்றுக் கொள்கிறான். ஒருவன் ஏதோ சில காரணங்களுக்காகத் தன்னை மாற்றிக் கொள்ள விரும்புகிறான்; அதன்படி மாற்றிக் கொள்கிறான்.

இதை ஒருவன் காலப்போக்கில் சிறுகச் சிறுகத் தன்னையறியாமலேயே மாறுதலடைதல்; சூழ்நிலைகளால் தனக்கு விருப்பமில்லாதிருந்தும் தன்னைத்தானே மாற்றிக் கொள்ளல்; பிறர் வற்புறுத்தி ஒருவனை மாற்றியமைத்தல்; பிறர் ஏற்படுத்திய மாற்றத்தை விருப்பமில்லா விட்டாலும் உலகியலுக்காக ஏற்றுக் கொளல்; பிறரால் வற்புறுத்தி ஏற்படுத்தப்பட்ட மாற்றமேயானாலும் அது தேவையானது என்று ஏற்றுக் கொளல்... இப்படிப் பல நிலைகள் (conditions), பல சூழல்கள் (Circumstances), பல வகைகள் (Varieties) உண்டு.

ஒருவன் தெரிந்து மாற்றம் பெறல், தெரியாமல் மாற்றம் பெறல், ஒருவன் தேவையற்ற மாற்றத்தைச் செய்து கொள்ளல்; ஒருவன் தேவையான மாற்றத்தையே மறுத்தல்; ஒருவன் அடிக்கடி தன்னை மாற்றிக் கொளல்; ஒருவன் என்றென்றுமே தன்னை மாற்றிக் கொள்ளாதிருத்தல் முதலியவை பற்றிச் சிந்திக்க வேண்டும். ஒருவன் மாறினானா? மாற்றப் பட்டானா? பிறரை மாற்றினானா? மாற்றிக் கொண்டது தனக்காகவா? பிறருக்காகவா? மாற்றப்பட்டது அவனுக்காகவா? அடுத்தவருக்காகவா? பிறரை மாற்றியது தனக்காகவா? அவருக்காகவா? ... முதலியவை பற்றியும் சிந்திக்க வேண்டும்.

"… நாட்டுக்கும் ஏட்டுக்கும் நல்ல பல பணிகள் ஆற்ற வேண்டுமானல்; ஆரவாரமோ, போராட்டமோ, பெருங்கூட்டமோ தேவையில்லை. அவரவர் தங்கள் தங்களுடைய அறிவு, ஆற்றல், ஆர்வம், உணர்வு, ஊக்கம், நிலைத் திறம், பயிற்சி, வலிமை, வளம், வாய்ப்பு, வசதி, … முதலியவற்றிற்கேற்பவே நாட்டுக்கும் ஏட்டுக்கும் தொண்டாற்ற முற்பட வேண்டும். அதை விடுத்துத் தங்களை அழித்துக் கொண்டு; தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைத் துறந்து; தங்களின் வாழ்வை மறந்து நாட்டுக்கும் ஏட்டுக்கும் தொண்டு புரிபவர்களால் முழுமையாகத் தொண்டாற்ற முடியாது. அவர்களின் தொண்டால் விளையும் பயன்களும் முழுமை யுடையனவையாக இருக்க முடியாது….."

**- ம.பழனிச்சாமி.**

**அன்பு**
**சித்தர்**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# சித்தர் இராமாயணம் பிறப்பிக்கப்படல் பற்றிய குருபாரம்பரியம்

"…. ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் தவறுகளாலும், வடஆரியர்களின் சூழ்ச்சிகளாலும், இமயமலைப் பிராகிருதக் களப்பிறராலும், கங்கைக்கரைப் பாலிமொழிக் கலப்பிறர்களாலும்….. எதிர்பாராத வண்ணம் தமிழ் மொழிப் புலவர்களும், தமிழ்ச் சுவடிகளும், தமிழ்ச் சங்கம் வளர்த்த மாளிகைகளும், மாடகூடங்களும், மன்றங்களும்….. மதுரை மாநகரும் பேரழிவுக்குள்ளாகி எண்ணூறு ஆண்டுகளாகப் போகின்றன. இன்னும் நம் தமிழர்களுக்கு அதிர்ச்சி, அச்சம், ஒற்றுமையின்மை, அன்னியரிடம் அடிமைகளாதல், மொழிப்பற்றின்மை, இனப்பற்றின்மை, நாட்டுப் பற்றின்மை….. முதலிய நலிந்த பண்புகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

"அப் பேரழிவுக் காலத்திலேயே வாழ்ந்து அவற்றின் வீச்சுக்களையும், ஓச்சுக்களையும், தாக்குதல்களையும், ஆட்சிகளையும், ஆளுமைகளையும் ….. தடுக்க, அகற்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக முயன்ற பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரூரின் அரிய பெரிய சீரிய கூரிய நேரிய….. முயற்சிகள் அனைத்தும் பெரிய தோல்வியையே பெற்று விட்டன. இது ஒரு மாபெரும் சாபக்கேடு. இனித் தமிழினத்தை உய்விப்பது எப்படி? எவ்வாறு? எவையெவற்றின் வழியாக?….. என்ற வினாக்களுக்கு விடை கிடைக்காமலேயே போகுமோ! …..

"இன்றைய நிலையில் வடஆரியரின் சூழ்ச்சியால் *வேதநெறி* எனும் வலைக்குள் அகப்பட்ட மீனாகவும், *சமசுக்கிருதம்* என்னும் கூண்டுக்குள் அடைபட்ட கிளியாகவும், நாட்டைப் பிரித்தும் துண்டாடியும், போட்டி பொறாமைச் சண்டைகளால் அமைதியற்ற நிலையில் வைத்தும்….. **தமிழர் அல்லாதார்,** [தமிழ் நாட்டிலுள்ள]

அனைவரையுமே சுரண்டியும், ஏமாற்றியும், கொள்ளையடித்தும் வாழுகிறார்கள். இவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது இயலவே இயலாது. ஏனெனில், இவர்கள் தமிழர்களிலேயே தன்னல வெறியர்கள், புகழ் வெறியர்கள், பொருள் வெறியர்கள், பதவி வெறியர்கள், தன்மானப் பிடிப்பற்றோர், தன்னம்பிக்கை இல்லாதோர், கூலி மனத்தார், அடிமையுணர்வுடையார், கங்காணிச் சித்தமுடையோர்..... என்ற ***அனைத்து வகையான துரோகிகளையும்*** தேர்ந்தெடுத்துத் தங்களுடைய கையாட்களாக்கிக் கொண்டு விட்டார்கள்.

"மேலும், இவர்கள், **வடஆரிய வேதநெறி வெறிமிக்க ஹிந்து மதத்தை வலிமையான ஆயுதமாகப்** பயன்படுத்தித் தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையுணர்வோ, மொழிப் பற்றுணர்வோ, இனப் பற்றுணர்வோ, நாட்டுப் பற்றுணர்வோ, துரோகிகளைப் பற்றிய எச்சரிக்கையுணர்வோ, விரோதிகளைப் பற்றிய விழிப்புணர்வோ..... **முளைவிடாமல்** செய்திடுகிறார்கள்.

"எனவே, இதற்கு ஒரே வழி பதினெண்சித்தர்களின் இராம காதையையும், கண்ணன் காதையையும் உடனடியாகச் சுவைமிக்க பேரிலக்கியங்களாகப் பல்வேறு வண்ணங்களில் வடித்தெடுப்பதுதான் ......" (வண்ணம் = வகை : தாலாட்டு, அம்மானை, கழங்கு, ஊசல்வரி, வள்ளைப்பாட்டு, தெம்மாங்கு, ஒப்பாரி, இசைப்பாடல், நாட்டியப்பாடல், கூத்துப்பாடல், நாடகப் பாடல், காப்பியம்.... எனப் பல வகைப்படும்.)

***ஆதாரம்****:- தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் [கி.பி.785 - கி.பி.1040] அவர்களின் குருபாரம்பரிய வாசகங்களிலிருந்து எடுத்தளித்தவர்; கி.பி.1772இல் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்த சித்தர் கருவூறார் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் உ.இராமசாமிப் பிள்ளை.*

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# <u>உகங்கள் வகுக்கப்பட்ட விதம்</u>

அஞுதிக் காலம் = மனித இனம் (= மணீசர் = மண்ணின் ஈசர் => மண் + ஈசர்) = மண்ணின் தலைவர் என்று வெறி கொண்டு வாழ்ந்த காலம் இந்தக் கால அளவு என்று குறிக்கப் படுகிறது. இந்தக் கால அளவில்தான் பதினெண்சித்தர்கள் மணீசர்களைத் **<u>தங்களுடைய தாய்மொழியான தமிழாலும்; தங்களுடைய மதமான இந்து மதத்தாலும் பண்படுத்தினுர்கள்</u>**. அதாவது, வெறி பிடித்த மணீசர்கள் 4,85,920 ஆண்டுகளுக்குப் பின் வெறியடங்கி நெறிமிக்க மனம் பெற்ற மனிதர்களாக மாறினுர்கள். இப்படி, மணீசர்கள் மனிதர்களாக மாறிய பிறகு இவர்கள் வாழப் போகும் கால அளவையும் கணித்திட்டார்கள் பதினெண்சித்தர்கள். அதனை நான்கு உகங்களாகப் [உகுத்தல் => உதிர்தல் = தானே முடிதல்] பிரித்தார்கள்.

அவை;

| | | |
|---|---|---|
| கிரேதா யுகம் | = | 17,28,080 |
| திரேதா யுகம் | = | 12,90,000 |
| துவாபர யுகம் | = | 8,64,000 |
| கலி யுகம் | = | 4,32,000 |
| பண்பட்ட மனித இனத்தின் ஆயுட்காலம் | = | 43,14,080 |

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். **இவர் ஒன்பது பிற்காலச் சோழர் குல மன்னர்களுக்குக் குலகுருவாகவும், அரசரில்லாக் காலங்களில் அரியாசனத்தில் அமர்ந்து அரசோச்சும் ஆட்சித் தலைவராகவும் வாழ்ந்திட்டார். தஞ்சைப் பெரிய கோயிலிலும், நாட்டின் பல பகுதிகளிலும் 'சிறுபள்ளி', 'பெரும்பள்ளி' என்ற கல்விக் கூடங்களை நடத்திப் பல கலைகளையும் முறையாக வளர்த்திட்டார்.**

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---


Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.



www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com
www.books.gurudevar.org